RTROP.No.305/2022 – 23.09.2024

CW1 – ஆயிக்கவுண்டன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் எங்கே உள்ளது என்றால் எடப்பாடி தாலுகா எருமப்பட்டி கிராமத்தில் உள்ளது. ஓமலூரிலிருந்து சங்ககிரி திருச்செங்கோடு வழியாக பரமத்தி வரை செல்லும் மாநில நெடுஞ் சாலைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரி. எங்கள் நிலம் ரோடு ஓரமாக இருந்ததா என்றால் எனது நிலம் ஓமலூர்–சங்ககிரி ரோட்டில் இருந்தது. 4 வழி சாலைக்காக அது ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் எனக்கு 14.35 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 6 ஏக்கர் விவசாய நிலம் ரோடு ஓரமாக உள்ளது. மேற்படி நிலம் என் பெயரில் இருந்தது என்பதற்கான கிரயப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரயப்பத்திரம் 10.08.2007 அன்று கிரயம்(Ex.C7) பதிவு செய்யப்பட்டது. அந்த சொத்தை நான் வாங்கும்போது 14.35 ஏக்கர் நிலத்தையும் ரூ.10,19,000/–க்கு வாங்கப்பட்டதாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி.

மேற்படி நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் முன்னர் வரை விவசாயத்திற்குதான் பயன்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. நான்

ஆர்ஜிதம் செய்த நிலத்தில் விவசாயம் செய்து வந்தேன். என்னுடைய நிலத்தில் சர்வே எண்.171/3 சி2–வில் 2152 சதுர மீட்டர், சர்வே எண்.171/4 பி–யில் 283 சதுர மீட்டர் மற்றும் சர்வே எண்.174/1 பி–ல் 1174 சதுர மீட்டர் மொத்தம் 3609 சதுர மீட்டர் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரி. அந்த நிலம் விவசாயத்திற்காக பயன்படுத்தி வந்ததால் அதை மனை நிலம் என மதிப்பீடு கேட்பதற்கு ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல.

இந்த நிலத்தில் ரோடு ஓரமாக நீள வாக்கில் ஆர்ஜிதம் செய்தார்கள் என்றால் சரி. இன்றுவரை விவசாய நிலமாகதான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரி. தற்போது அமைக்கப்பட்ட புதிய 4 வழி சாலையிலிருந்து என்னுடைய நிலத்திற்கு நேரயடியாக செல்ல முடியும் என்றால் சரி. ரோடு அமைக்கப்பட்டதால் என்னுடைய நிலத்தின் மதிப்பீடு அதிகமாகி உள்ளது என்றால் இல்லை. நிலத்திற்கு மதிப்பீடு அதிகமாக கொடுக்க வேண்டும் என்பதற்காக பக்கத்தில் உள்ள நிலங்களின் மதிப்பீட்டை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதிக இழப்பீடு கேட்பதற்காக எந்த நிலத்தை குறிப்பிட்டு கேட்கவில்லை என்றால் எனக்கு சம்மந்தப்பட்ட சர்வே எண்.171/4 பி

நிலத்திற்கு அதிக இழப்பீடு கொடுத்துள்ளார்கள். மற்ற சர்வே எண் நிலங்களுக்கு குறைகாக இழப்பீடு கொடுத்துள்ளார்கள். சர்வே எண்.171/4 பி நிலமும் மற்ற இரண்டு சர்வே எண்கள் 171/3 சி2 மற்றும் 174/1 பி ஆகியவற்றின் வகைப்பாடு மற்றும் அரசின் மதிப்பு வேறு வேறு வேறாக இருந்தது என்றால் சரி. அருகில் உள்ள நிலங்கள் சதுரடி விலை மதிப்பில் உள்ளதாகவும், விலை அதிகமான மதிப்பீடு உள்ளதாகவும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யாமல் கோர முடியாது என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் ஆர்ஜித சமயத்தில் இருந்த மதிப்பீட்டை கணக்கிட்டும், அருகில் உள்ள மற்ற நிலங்களின் மதிப்பீட்டை கணக்கிட்டும் சரியான முறையில் இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னுடைய நிலத்திற்கு அருகில் 1600 மீட்டர் நீள வாக்கில் உள்ள மற்ற நிலங்களின் விலை மதிப்பை கணக்கில் எடுத்துக்கொண்டு நிலத்தின் மதிப்பை நிர்ணயித்துள்ளார்கள் என்றும் எனவே நிலத்தின் மதிப்பை அதிகரிக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் ஆதாரம் இல்லாமல் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.